**யக்கலமுல்ல பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான யக்கலமுல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குத் தயாரிக்கையில் கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நில உருளையினதும் நீர் பவுசரினதும் பெறுமதியும் பெறவேண்டிய ரூபா 12,274 வட்டி வருவாயும் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய ரூபா 22,965 விநியோக வரி வருவாய் கடன்பட்டோர் கணக்கிலிடப்பட்டிருந்தது.

#### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 9,237,230 பெறுமதியான 05 கணக்கீட்டு விடயங்களக்குரிய மிதிகளும் அவற்றுடனொத்த உப பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளது மீதிகளுக்குமிடையே ரூபா 3,679,969 கூட்டுத்தொகையுடைய வேறுபாடு நிலவியது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ரூபா 9,007,995 கூட்டுத்தொகையுடைய 12 கணக்கு மீதிகளது பெறுமதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 1,348,993 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 295,642 முத்திரைக் கட்டணம் என்பவற்றைத் தீர்த்துவைப்பதற்கு வேலைத் திட்டத்தைத் தயாரித்து அதனை அமுலாக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 108,507,307 பெறுமதியான காணியும் கட்டிடங்களும், இயந்திரங்களும் உபகரணங்களும், மோட்டார் வாகனங்களும் கை வண்டிகளும், தளபாடங்களும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்கள் என்பவற்றிற்கான நாளது வரையாக்கப்பட்டு வகுப்பு வாரியாகத் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும், ரூபா 7,428,862 கூட்டுத்தொகையுடைய உள்ளுர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதிய மீதி சம்பந்தமான நாளதுவரையாக்கப்பட்ட கடன் பதிவேடு மற்றும் காலப் பகுப்பாய்வு போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாகப் பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே விபரிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | முற்பணமாக 5 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 க்கும் அதிகமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 570, 571(1)(2) என்பன | மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 04 வகையான ரூபா 278,751 கூட்டுத்தொகையுடைய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணங்கள் 1645,1646 என்பன | மீளாய்வாண்டின்போது சபைக்குரிய 17 வாகனங்களது நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தச் செயலாற்றல் பொழிப்பும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,773,831 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,831,630 ஆகும். இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 5,057,799 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருவாய்க்கு ஒப்பான மீண்டுவருஞ் செலவினம் 14 சதவீதம் அதிகரித்திருந்ததுடன், மீண்டுவரும் வருவாய்க்கு ஒப்பாக மீண்டுவருஞ் செலவினம் அதிகூடிய 93 சதவீதமாக அமைந்திருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் ஆண்டிற்கான மீண்டுவரும் வருவாய் மற்றும் செலவினம் என்பவற்றை ஒப்பிடுகையில் மூன்று நிகழ்ச்சித்திட்டங்களில் வருவாயிலும் கூடிய செலவினம் தென்பட்டது.

(இ) மீளாய்வாண்டினது உள்ளவாறான மூலதன வருவாய் ரூபா 10,255,677 ஆகியபோதும், உள்ளவாறான மூலதனச் செலவினம் ரூபா 6,612,795 ஆகியமையால் மூலதனச் செலவிலும் கூடிய ரூபா 3,642,882 மூலதன வருவாய் நிலவியது. மீளாய்வாண்டினது வரவு, செலவுத் திட்டத்தின்படி மூலதன வருவாய் ரூபா 11,510,000 ஆகவும் மூலதனச் செலவினம் ரூபா 12,650,000 ஆகவும் மதிப்பிடப்பட்டபோதும், மூலதன வருவாயிலும் கூடிய ரூபா 1,140,000 மூலதனச் செலவினத்திற்கு எவ்வாற நிதியளிக்கப்படும் என்பது விளக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிலும் முன்னைய 2 ஆண்டுகளிலும் சபையின் வருவாய்க்கான உதவி, சுய உற்பத்தி வருவாய் மற்றும் மீண்டுவருஞ் செலவினம் என்பவற்றின் பொழிப்பு வருமாறு.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருவாய் | வருவாய் உதவித் தொகை | சுய உற்பத்தி வருவாய் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 40,521,826 | 25,128,776 | 15,393,050 | 37,747,995 | 22,354,945 |
| 2014 | 37,513,140 | 22,229,120 | 15,284,020 | 29,681,510 | 14,397,490 |
| 2013 | 23,065,696 | 11,367,317 | 11,698,379 | 22,387,772 | 10,689,393 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீண்டுவருஞ் செலவினம் தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்குள்ளாகி சபையின் சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் அதிகரித்திருந்தது.

(ii) வருவாய்க்கான உதவி கிடைக்காது விடின் சபையினது வருவாயின் மூலம் மீண்டுவருஞ் செலவினத்தை எவ்விதத்திலும் ஈடுசெய்ய முடியாது போகும் நிலை தென்படுகின்றது.

(iii) வருவாயை அதிகரித்துக் கொள்வதற்குக் கவனம் செலுத்தவேண்டும் எனவும், அதன் பொருட்டு முறையான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை அமுலாக்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாதவிடத்து சபையின் நிதி முகாமைத்துவ நலிவுடனான நிலைமையில் தொடர்ந்து செல்வது சர்ச்சைக்குரியதாகி விடும் என்பதும் கணக்காய்வின் அபிப்பிராயமாகும்.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டின் நிலைமை மீளாய்வாண்டின் நிலைமையுடன் ஒப்பிடப்படும் போது நடைமுறை மற்றும் உடனடி விகிதங்களில் திருப்திகரமான மட்டம் நிலவவில்லை.

## 2.4 வருவாய் நிர்வாகம்

### 2.4.1 ஏக்கர் வரி

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் அறவிடப்பட வேண்டியதாக உள்ள ஏக்கர்வரி ரூபா 215,444 ஆகும். இதில் மீளாய்வாண்டின்போது 15 சதவீதமான குறைந்த பெறுமதியே அறவிடப்பட்டிருந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4.2 தீர்வையும் வரியும்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் முன்னேறிய பிரதேசத்தை இனங்கண்டு தீர்வையையும் வரியையும் அறவிடுவதற்குச் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 2.4.3 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின்போதும் முன்னைய ஆண்டுகளிலும் அறவிடப்படவிருந்த ரூபா 178,150 வர்த்தக வரி, வேலைகளுக்கான வரியாகிய ரூபா 49,000 என்பவற்றை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(அ) பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.4.4 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 7,894,290 மற்றும் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 261,750 எனப் பெறப்படவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ஊழியர்கடன் மீதி ரூபா 1,136,592 ஆகும். இடமாற்றம் பெற்றுச்சென்ற 11 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 41,289 கடன் மீதி என்பன உள்ளடங்கிளிருந்தபோதும், அக்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி, முன்பள்ள ஆசிரியைகளுக்கான 09 பதவிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி என்பவற்றிற்கு மேலதிக எண்ணிக்கையினர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். நூலக பதவி மற்றும் ஆரம்ப நிலைப் பதவிகள் 04 என்பவற்றில் வெற்றிடம் நிலவியபோதும், அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது மேலதிகமானோரின் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சபை நடாத்தும் நூலகத்தில் ரூபா 63,151 கிரயமுடைய 4664 புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பாக நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) முன்கொண்டு வரப்பட்ட ரூபா 295,642 கூட்டுத்தொகையுடைய முத்திரை வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபையின் பொது நிதியில் இருந்தது.

### 3.2 மின் உற்பத்தி இயந்திரக் கொள்வனவு

சபை 2014 டிசெம்பர் 31 அன்று ரூபா 999,990 கொடுப்பனவு செய்து தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து மின் உற்பத்தி இயந்திரத்தை கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மின் உற்பத்தி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு புதினப் பத்திரிகை விளம்பரத்தில் 10KV – 25 Kv என்பவற்றுக்கிடையேயான ஆற்றல் உள்ள யப்பானிய உற்பத்தியான புதிய இயந்திரங்கள் தேவையென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், சபை 8kv-10kv என்பவற்றுக்கு இடையேயான இங்கிலாந்து உற்பத்தி இயந்திரத்தையே பெற்றிருந்தது.

(ii) கொள்வனவை மேற்கொள்கையில் தொழில்நுட்பக் குழு பரிந்துரையைப் பெறப்படவில்லை. மின் உற்பத்தி இயந்திரத்தை பயன்படுத்த எண்ணியுள்ள மயாணத்திற்குத் தேவையான இயந்திர அளவினை மின்சாரப் பொறியியலாளரின் மூலம் பெற்றிருக்கவில்லை.

(iii) இயந்திரத்தின் ஆற்றல், உற்பத்தி செய்யப்பட்ட நாடு, இயந்திரத்தின் மாதிரி, பெறுமதி ஆகியன கருத்திற் கொள்ளப்படாதும் குறைந்த விலையைச் சமர்பித்த நிறுவனத்தைக் கருத்திற் கொள்ளாமலும் கொள்வனவு செய்யப்பட்டமையால் சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 304,990 ஆகும்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(அ) சபையின் ஒவ்வொரு நோக்கமும் நிறைவேற்றப்படுவதற்காக வரவு, செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தும்போதும் பின்னடைவு தென்பட்டது. அது சபைக்கும் சபைக்குட்பட்ட பிரதேசவாசிகளுக்கும் இழப்பாகும் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடங்கிய 07 செலவின விடயங்களது ரூபா 10,673,324 கூட்டுத்தொகை சேமிப்புக்குள்ளானதுடன் வேறு 02 செலவின விடயங்களில் வரம்பிற்கு அதிகமாக ரூபா 7,187,614 செலவிடப்பட்டிருந்தது. 06 வருமான விடயங்களில் எய்தப் பெறாதுபோன வருவாய் ரூபா 3,952,615 ஆகும். சுய உற்பத்தி வருவாயில் 30 சதவீதம் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டதால் வரவு, செலவுத்திட்டம் நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை எனத் தென்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 134 என்பவற்றில் காணப்படும் ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா.ஃ.யஹ.ஃ.01.ஃ.ந.வ.லே எனும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை. எனினும், சபை உள்ளகக் கணக்காய்விற்கு நியமித்திருந்த அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டில் ரூபா 392,624 சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையினது ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

நான்கு சக்கர மினி டிறக்டர் சம்பந்தமாக 2015 யூலை 10 ஆந் தகதிய 2/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

சபை பயன்படுத்தும் 05 வாகனங்களைச் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) மனிதவள முகாமைத்துவம்